# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

## 01. சபைச் செயலாளர் (JM 1-1) 01 பதவி வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படையில்) (BOARD SECRETARY)

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஒரு இளமாணிப் பட்டம் அத்துடன் ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.
2. பதவிக்கு இயைபான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை கொண்டிருத்தல்.
2. பதவிக்குரித்தான விடயத் துறையில் இணை உத்தியோகத்தர் வகுதியில் (MA 3) பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகர சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
3. பதவிக்குரித்தான விடயத் துறையில் 'முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத' (MA 1) பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகர சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:** JM 1-1- 01/2025: ரூபா [72,650-10 x 1,360 — 18 x 2,040 = 122,970/-]

**ஆட்சேர்ப்பு நடைமுறை:** நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவினால் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

## 02. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் - MA 2-1 (09 பதவி வெற்றிடங்கள்) MANAGEMENT ASSISTANT — TECHNICAL

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இயைபுடைய துறையில் தேசிய தொழிற் திறமை தகைமையின் தகவல் தொழில்நுட்பம் / அலுவலக முகாமைத்துவத்தில் (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்:**
மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமை தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது:**
18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பள அளவு:** MA 2-1 01/2025: Rs. [50,540 — 10 x 540 — 7 x 630 — 4 x 890 — 20 x 1190 = 87,710/-]

**ஆட்சேர்ப்பு நடைமுறை:**
மன அதிகாரியினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

**எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை:**

**பரீட்சைக்கான பாடங்கள் பின்வருமாறாகும்:**

- மொழித் தேர்ச்சி
- தகுதிகாண் பரீட்சை
- பதவிக்கு இயைபான பாடத்தில் அறிவு

**மொழித் தேர்ச்சி**

இந்த வினாத்தாள், அபேட்சகரின் வெளிப்பாடு திறன், புரிதல், எழுத்துப்பிழை மற்றும் எளிய இலக்கண விதிகளைப் பயன்படுத்துவதில் உள்ள அறிவை சோதிக்கும் கேள்விகளைக் கொண்டிருக்கும்.

**தகுதிகாண் பரீட்சை**

இந்த வினாத்தாள் அபேட்சகர் தனது அலுவலகக் கடமைகளைச் செய்வதற்கான தகுதி மற்றும் திறனைக் கருத்திற் கொண்டு வடிவமைக்கப்படும்.

**பதவிக்கு இயைபான பாடத்தில் அறிவு**

இந்தப் பரீட்சை பதவிக்கு இயைபான அபேட்சகரின் பாட அறிவை மதிப்பீடு செய்வதற்கானது.

## 03. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது) - MA 1-1 (15 பதவி வெற்றிடங்கள்) MANAGEMENT ASSISTANT — NON TECHNOLOGICAL

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் (பொது வினாப்பத்திரம் தவிர்ந்த) மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

ஊழியர் வகுதியின் ஆரம்ப நிலை – திறனுடையோர், அரைத் திறனுடையோர், திறனற்றோர் போன்ற பின்வரும் தகைமைகளைக் கொண்டோர் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**கல்வித் தகைமைகள்:**
க.பொ.த. (சா.த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட்டதாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

**ஏனையவை**

மேற்குறிப்பிட்ட ஊழியர் வகுதியில் நிரந்தரப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது** :
18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஆட்சேர்ப்பு நடைமுறை**
நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

**எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை:**

**பரீட்சைக்கான பாடங்கள் பின்வருமாறாகும்:**
- மொழித் தேர்ச்சி
- தகுதிகாண் பரீட்சை / பொது அறிவு
- கணனிப் பரீட்சை

**மொழித் தேர்ச்சி**
இந்த வினாத்தாள், அபேட்சகரின் வெளிப்பாடு திறன், புரிதல், எழுத்துப்பிழை மற்றும் எளிய இலக்கண விதிகளைப் பயன்படுத்துவதில் உள்ள அறிவை சோதிக்கும் கேள்விகளைக் கொண்டிருக்கும்.

**தகுதிகாண் பரீட்சை மற்றும் பொது அறிவு**
இந்த வினாத்தாள் நடப்பு விவகாரங்களில் அபேட்சகருக்குள்ள பொது அறிவு மற்றும் தனது அலுவலகக் கடமைகளைச் செய்வதற்கான தகுதி மற்றும் திறனைக் கருத்திற் கொண்டு வடிவமைக்கப்படும்.

**கணனிப் பரீட்சை**
இந்தப் பரீட்சை பதவிக்கு இயைபான அபேட்சகரின் பின்வரும் அறிவை மதிப்பீடு செய்வதற்கானது.
- தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படை கருத்துக்கள்
- Windows Operating System மற்றும்
- File Management

**சம்பள அளவு:** MA I -1 01/2025: ரூபா [ 46,220 — 10 x 540 — 7 x 630 — 4 x 890 — 20 x 1190 = 83,390/-]

**பொது நிபந்தனைகள்**

சகல அபேட்சகர்களும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையுடையவராகவும் நாட்டின் எப்பாகத்திலும் தமது கடமைக்குரித்தான சேவைகளைச் செவ்வனே செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இந்த பதவிகளுக்கான மாதிரி விண்ணப்பப் படிவங்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் (**www.childprotection.gov.lk**) உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2025 ஜுன் மாதம் 02ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சகல விண்ணப்பப் படிவங்களுடனும் பிறப்பத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை அல்லது வெளிநாட்டுக் கடவுச் சீட்டு மற்றும் கல்வி, தொழில்சார் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோர்களின் பெயர் மற்றும் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் சகிதம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிப்பதானால் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான வகையில் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் மற்றும் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தைக் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

அரச துறை / கூட்டுத்தாபனம் / நியதிகள் சபைகளில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாகவே அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணக்கமில்லாத முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விண்ணப்பங்களும், மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். இந்தப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வகையிலாவது ஆதரவைப் பெறுவது தகுதியீனமாகக் கருதப்படும். குறும் பட்டியலிடப்பட்ட அபேட்சகர்கள் மட்டுமே எழுத்து மூல போட்டிப் பரீட்சைக்கு அல்லது / மற்றும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,**
**இல. 330, தலவத்துகொட வீதி,**
**மாதிவல, ஸ்ரீ ஜயவர்தனபுர.**

**தொலைபேசி**: 0112778911- 14
**இணையதளம்:** www.childprotection.gov.lk